2012 ஏப்ரல் 20]

கால்நடைகளே இருப்பதால் அங்கே கால்நடை கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன், இருக்கையில் இல்லை.

வினா வரிசை எண் 137, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. வைரமுத்து, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

137—

பேருந்து பணிமனை

***5482—திரு. பி.கே. வைரமுத்து:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமயம் தொகுதி, திருமயத்தில் பேருந்து பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி, கந்தர்வக்கோட்டை, இலுப்பூர் ஆகிய 3 பணிமனைகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவுப்படி 9-12-2011 அன்று நிருவாக ஒப்புதல்கள் வழங்கப்பட்டுள்ளன. கந்தர்வக்கோட்டை, இலுப்பூர் ஆகிய பணிமனைகளுக்குத் தேவையான இடத்தைத் தேர்வு செய்ய நேரில் சென்று ஆய்வுகள் செய்யப்பட்டுள்ளன. மேலும், திருமயம் தொகுதி, திருமயத்தில் புதிய பணிமனை அமைக்க உரிய இடம் கிடைக்கப்பெற்ற பின்பு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் உத்தரவு பெற்று நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. வைரமுத்து அவர்கள்.

திரு. பி.கே. வைரமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடைமடை திறந்த வெள்ளம், கடைக்கோடி மக்களையெல்லாம் அடைந்தது போன்ற மகிழ்ச்சி தந்தது அம்மா அவர்களின் ஆட்சி. மட்டற்ற நலப் பணிகள் மக்களை

அடைந்ததால், மக்கள் பெற்றிட்ட மகிழ்ச்சிக்கு அளவுதான் இல்லை அம்மா! தாலுகா தலைமையிடமான திருமயத்தில், வரலாற்றுச் சிறப்புமிக்க சுற்றுலாத் தலமான ஊமையன்கோட்டை, பல்லவ மன்னர்களால் அமைக்கப்பட்ட பிரம்மாண்டமான சிவன், பெருமாள், குடைவரை ஆலயங்கள், ஒரே சுற்றுச்சுவரில் கல்லிலே கலைவண்ணம் கண்ட பெருமைமிகு திருமயத்தில் 15 கிலோ மீட்டர் சுற்றளவில் 3 பொறியியல் கல்லூரிகள், 4 பாலிடெக்னிக் கல்லூரிகள், 2 கலைக் கல்லூரிகள், 20 கிலோ மீட்டர் தொலைவில் அழகப்பா பல்கலைக்கழகம் ஆகியன உள்ளன. புதியதாக தொழிற்சாலை . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் வைரமுத்து, கேள்விக்கு வாருங்கள்.*

திரு. பி.கே. வைரமுத்து: *இல்லை, இதெல்லாம் தேவை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சீக்கிரம் கேளுங்கள். நான் இன்னொருவருக்கு வாய்ப்பு கொடுக்க வேண்டுமல்லவா?*

திரு. பி.கே. வைரமுத்து: BHEL *தொழிற்சாலை இருக்கிறது. எனவே, ஒரு பேருந்து பணிமனை அமைப்பதற்கு விரைவாக 5 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்தி, பணிமனை அமைத்துத் தரும்படி மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களை, மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.*

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு. திரு. வி. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே அதற்குண்டான இடங்களைத் தேர்வு செய்து, துறைக்கு கோப்புகள் வரப்பெற்ற பின்பு, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று, விரைவில் போக்குவரத்துப் பணிமனை அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 138, மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.*